உ

வேலும் மயிலுந்துணை.

# கணிகைவிலக்கும்
# கதிரேசன்கீர்த்தனையும்.



இவை வட்டுக்கோட்டை கிழக்கு
ஸ்ரீமத் வித்துவான் வ. கணபதிப்பிள்ளை
வமிசத்தில் அவதரித்த
ஸ்ரீமத் ப. வயிரமுத்து என்பவரால்
இயற்றப்பட்டது.

விபவ௵ வைகாசி ௴
யாழ்ப்பாணம்
நாவலர் அச்சுக்கூடம்.

(Copyright Registered)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

உ

வேலும் மயிலுந்துணை

## கணிகைவிலக்கும்

# கதிரேசன்கீர்த்தனையும்.

விநாயகர்துதி.

வெண்பா.

சொக்கர் திருமகனே சுந்தரியாள் பாலகனே
திக்கெல்லாம் போற்றியிடுந் தெய்வமே—விக்கினங்கள்
வாராமற் காத்திடுவாய் மான்மருகன் றன்றுணைவா
காரானை மாமுகனே காப்பு.

கண்டி கதிர்காமம் (எ—மே)

பல்லவி,

மால்மருகன் பாதந்தன்னை நினைமனமே கெட்ட
மாதர்களாசை தன்னை மறமனமே.

சரணங்கள்.

பல்லுயிர்கடோறுமே நின்ற குருபரனைப்
பரங்கிரிதனிலுறையும் பாலகனார் பாதமதை
அனுதினமும் மறவாதன்புடனே துதிசெய்வாய் மால்.

வாலையபிராமிதிரிசூலி சிவகாமிசுதன்
வள்ளலை யனுதினமு முள்ளம் நினைந்துருக
கள்ளப்புலன்களறும் கந்தனருள் கிடைக்கும் மால்.

ஆலமுண்ட கண்டனையனருளுமெங்கள்
பாலன்குமரகுரு சீலன்றிருவடியைப்
பத்திசெய்தே யிருந்தால் முத்திகிடைத்திடுமே மால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலமயிலேறு மையன்
வேலேந்தும் பன்னிருகையன்
பாருலகை யாளவந்த பரமதயாபரனை
சீருலகிலே நிதமுஞ் சிந்தித்திறைஞ்சிடுவாய் மால்.

தோல்முலை தன்னையே காட்டி மருட்டியுன்
கைப்பொருளெல்லாங் கவர்ந்து கொண்டபின்பு
ஓட்டி வெளியே துரத்தி விடுங்கெட்ட
மங்கையராசை தன்னை விலக்கி மால்

கலித்துறை.

பல்லினைக்காட்டிப் பாசாங்கு செய்துவுன் பொருள்கவர
சல்லாப லீலையிற் சரசங்கள் காட்டியுனையலாலெனக்கு
உல்லாச நாயகன் வேறுமுண்டோ வென்றனை மருட்டும்
பொல்லாதகணிகையர் தன்னாசையைநீக்குதல் புண்ணியமே

வேறு சுருதி.

சொந்த மனைவி — சிந்தை வருந்த
சந்ததியாருங் — கண்டுவருந்த
காப்புக் கொலுசு — கல்லட்டியலும்
கழுத்துக்கேற்ற — சரட்டுக் கொடியும்
பவுண்மாலை — சரப்பளி
பதக்க — முடனே
மூக்குத்தி — முருகுடன்
ஒட்டியாணம் — இன்னும் பலவித
நகைகளுடனே — புட்டாப்புப்
போட்ட — பட்டுரவுக்கை
கவினுடுப்புக் கேற்ற — சற்றின்சேலை
இன்னும் பலவித — சேலைத்தினுசும்
பட்டுத் தலையணை — படுக்கைக் கேற்ற
பட்டு — மெத்தை
சேர்ந்து — படுக்கக்
கட்டில் — கவுச்சி
சோவாக் — கட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுக் — கம்பளமும்
தலைக்குப் பூசும் — சம்பங்கியெண்ணை
சாந்து சவாது — அத்தர் புனுகும்
பூசிக்குளிக்கும் — மணமுள மஞ்சல்
வாஷப் பாக்குடன் — வெத்திலைக் கூட்டும்
நேசத்துடனே — தேடிக் கொடுத்து
ஆசையுடனே — யிருந்து வசிக்க
அலங்காரமான — வீடுகொடுத்து
என்னஞ் சிலபல — சாமான் வேணும்
என்னுசைக்குரிய அரிய துரையே.
என்வீடுநிறைந்த ஒளிபோல்வந்த

அசைக்குரிய திருத்தாளா என்ற—மெட்டு.

வேறு.

சுந்தரமார வொய்யாரா வெகுசொகுசுக்கு வாய்த்தமணவாளா
என் சிந்தை மகிழவே — வந்த சிங்காரனே
என்றுவுன் — சொத்துகளை நித்தமுமே
புத்தியுடனே-பறிக்க மாட்டுவாள்
மயல் - காட்டுவாள்
நிதம் - வாட்டுவாள்
உனை — பாட்டுவாள்
கெட்ட-வேசியராசைதன்னை மறந்துமால்.
குத்து விளக்கு — செப்புப்பானை
குணமுள்ள — நல்ல பாத்திரங்கள்
வகையுடன் — வேண்டிக்
கொடுத்துமே-பின்னும்
குதிரைக்காடி — மோட்டர்காறும்
குளிக்க — முழுக
குசினிக்கு — வேலைக்
காரரும் — வைத்து
தேசமறிய — மாதவிதம்
கிரமத்துடனே — செலவு கொடுத்து
அவள் — மிகவுஞ்
சந்தோ —ஷப்படவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற் – பணமுமே கட்டி
நாளை நிட்சயம் — வாறேனென்று
கோச்சுக் — காடியேறி
வீட்டுக்கு — வரவே
ஆசைக்குரிய — சொந்த மனைவி
அழுது மிகவே — புலம்பித்திட்ட
பெற்றூர் தேடி — வைத்த பொருளை
முற்றும் வம்புச் — செலவு செய்து
நித்தம் போக — லீலைபுரிந்து
நித்திய நிர்மலன் — நினைவது மறந்து
வந்த பொருளும் — வம்பிலிழந்து
போகவே — முழுதும் போகவே
போனாலுமவள்வீட்டுச்செலவுவெகுசட்டமுடன்கட்டவேணும்
என்று மிகவே — யோசிக்கும் வேளையில்
பட்டுவர்ன்னச்சேலை — பத்தாவே நாளை
திட்டமுடன் வாங்கித்தாரும் — என்னைக்காரும்
நிதம் வாரும் — வந்து சேரும்
அன்பு தாரும் — கழிகூரும்
என்று சாலங்கள் காட்டுஞ் சண்டாளியாசையைவிட்டுநீ மால்.

வேறு சுருதி

ஆசையுடனே — யணைந்து மருவிய
தாசியாலே — வந்த பலவித
நோய்கள் செய்யுந் — துயரினையிப்போ
சுருக்கி யுரைப்பதைக் — கேளுமுலகீர்
இதையுணர்ந்து — பாருமுலகீர்
அண்ட வாதம் — அரையாப்பிருமல்
கண்டமாலை — கைகாலுளைச்சல்
சலரோகமீளை — குட்டம் வெட்டை
தலைவலி வெப்பம் — தைரிய யீனம்
பறங்கிப் புண்ணும் — பவுந்திரக்கட்டும்
பலவித நோயும் — வந்து வருத்த
தயிரியங் கெட்டுத் — தடியது வூன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியர் வீடு — ஏகும்போது
சடலமெங்கும் — வெடிலது வீச
அடிக்கடி சலமூங் — கடுத்துமே வருத்த
அவ்வழியில் — நிற்கும்
மரநிழலிற் — படுத்து
களைமிக வந்து — மதியுமயங்க
மலசலம் வருவது — தெரியாதயர்ந்து
கிடப்பதை யவ்வழி — நடப்பவர் கண்டு
நகைநகைத்தே சிலர் — நடந்துமே போக
அறிந்தவர் கண்டு — அகமது வருந்தி
அவர் கிட்ட — நெருங்கித்
தட்டி — யெழுப்ப
விழித்துமே — பார்த்து
வெட்கித்து — நாணி
சுகமில்லை யென்று — சொல்லும்போது
ஆகா உனது — அழகும்போச்சே
அரிய தைரியம் — அடியோடிழந்து
தடியது பிடிக்கத் — தலைவிதியாச்சா,

ஆகா,

உன் மடைத் — தனமு
மிப்படி — யாச்சா
உன் குலமுறை — தவறி
நடந்ததால் — வந்த
இழிவை யினியென் — செய்யலா மென்று
எடுத்தவருரைக்கும் — வேளையிலப்போ
என் குடியிற்பிறந்த - மனைவி வருந்த
கொடிய வேசையோ - டிருந்தது போதும்
என்று மனது - பதைபதைத்
தேங்கி வருந்தி - யிருக்கும்போது
தாசியாலே — வந்த மோசம்
என்று பலரும் - பார்த்துப் பேச
முன்னுள்ள நினைவு - முற்றுங்கெட்டு
சண்முகா வென் - விதியோ வென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகையோ - டெழுந்து
வைத்தியர் — வீடுமே செல்ல
வைத்தியர் வெகு - குறிப்பாய்ப் பார்த்து
இங்கே வந்த — விஷயமென்ன
என்றுமவரும் — வினவும்போது
ஐயா எமது — நோயை நீக்கி
விடுவது - புண்ணிய மென்று கூற
அப்போ வைத்தியர் - நகைத்துமே சொல்வார்

என்னடி நீபெற்ற மங்கை என்ற—மெட்டு

வேசைமேல் வைத்திடும் — நேசம்
உன் வேடிக்கையால் வந்த - மோசம்
அவள் மேலே நீவைத்த - விஸ்வாசம்
ஈசன்றனை நினையாமல் - உன்
காசுபணதியுங் - தோற்று
உன தாசைமனைவி - வருந்த
அவளுக்கு நீசெய்த - தோஷம் வேசை.
என்று - வைத்தியர்
எடுத்துமே - யுரைக்க
என்றலைவிதி — யிப்படியாச்சு
தாங்க வொண்ணுது - தயவு புரிந்து
தீங்குசெய் - பொல்லா
மருந்தாகுதல் - தாரும்
இப்போ வென்சீவ - னிறப்பது நல்லது
என்றுமே கூற - வைத்தியர் கேட்டு
மனமது நொந்து வருந்தியுரைப்பார்

வேறு

ஆகாமியங் குடிகொண்ட பாவி
யென்றதட்டி யுரைத்துமே கூவி
உன்பெண்டாட்டி பிள்ளையை மேவி
நீபோய்ப் பிழைபடா கெட்ட மூதேவி
கெட்ட நோய்கள்பல வேண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு யிங்கேவந்தது கெட்டி
கட்டையில் வைத்தாலு மூன்றன்
வெட்டை நோய் போகாது மட்டி

வேறு

வைத்தியர் மிகவுங் கோபித்து வுரைக்க
இனியென் செய்வேன் என்று வருந்தி
மனிதர் முன்போக மனக்குதே யென்று
என்றலை விதியோ வென்று வருந்தி
முன்போன தாசி வீட்டேகுவோ மென்று
எண்ணியே மிகநண்ணியே

விருத்தம்.

முப்புரமெரித்த வெங்கள் முதல்வனே கயிலைவாசா
இப்படிப் பிரமதேவ னெழுதியவிதியோ வென்று
செப்படி வித்தைகாட்டி முன்பொருளெலாங் கவர்ந்து கொண்ட
தப்பிதமுள்ள தாசி வீட்டுக்கேற்றிலே கூவிநின்று

வேறு.

என்னுசைக்குரிய கண்ணுட்டி இப்போ
என்னை யாதரவு செய் சீமாட்டி
தாகம் பசியது வந்து
சோகம் வருகுதே யந்தோ
என்று மிகவருந்தி னும்
ஏனென்று கேளா திருப்பாள்

வேறு

பின்னவள் கேற்றிலே போய்நின்று
கூப்பிட்டுப்பார்த்தாலு மாரென்று வந்துமே கேளாள்
உன்னைப்பாராள் முன்போல்வந்துசேராள் முத்தந்தாராள்
வந்தவழி பார்த்துப் போவாய்
மனைவியுடன் போய்ச் சேர்வாய்
ஒன்றுக்கும் வழியற்ற மட்டி
நீஇங்கே வந்தது கெட்டி
என்றுசொல்லுங் கெட்ட தோசியை நப்பாமல் மால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தம்

என்னடா இங்கேவந்து இங்கிதவார்த்தை சொல்லி
பின்னிதம் பேசுகின்ற பேயாநீ போடா போடா
முன்னமேபோகும்போதுன் மனைவியினிடஞ் செல்லென்ற
சொன்னசொல் மறந்து இங்கே தோசிநீ வந்ததென்ன

வேறு.

இங்கேநீ வந்தது என்ன
நமக்கென்னநீ கொண்டிங்கே வந்தாய்
எங்கைதான்போனாலும் போவாய்
இனிச்சங்கடம் வேண்டாம்நீ போபோ.

விருத்தம்.

என்னடி மாதே நீதானிப்படிச் சொல்வாயென்று
முன்னமேயறிந்தேனில்லை மூடன்யானென்னசெய்வேன்
அன்னிதம் பேசுகின்று யரிவையே நீயுமிப்போ
சின்னமாம்வார்த்தைபேசிச்சிறுக்கிநீமுறுக்கவேண்டாம்.

வேறு.

கன்னியே யென்னடி சொன்னாய்
என் காலமு மிப்படி யாச்சா
முன் செய்த நன்றியும் போச்சா
மூத்தோர் சொல் சரியாச்சா

விருத்தம்

பேயனைப் போலேநின்று பிதற்றுறு யுன்னாலென்றன்
காயத்தில் நோய்கள் வந்து கனதுயராச்சுதிப்போ
மாயமாயெனை மயக்கி மாரீசஞ் செய்து கெட்ட
வாயனே போடா யிப்போ வஞ்சனை பேசவேண்டாம்.

வேறு

வீண்வார்த்தை வேண்டாம்நீ போடா
மிக வேடிக்கை காட்டாதே மூடா
ஆண்பிழைக்கழகிது வோடா
அகலப்போ நில்லாதே மாடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தம்,

தாசியே யென்னசொன்னாய் தைரியங் கெட்டதென்றோ
பேசாத வார்த்தையெல்லாம் பேசுறாயென் பணதியெல்லாம்
கூசாமல் சாலங்காட்டிக் குடிகேடி கவர்ந்துகொண்டாய்
தோசியே யென்போல்நீயுஞ் சுறுக்கினி லனுபவிப்பாய்.

வேறு.

மங்கைநீ சொல்வது என்ன
உன்மனவர்மமி தென்ன்
சங்கை யெல்லாமுன்னால் போச்சு அடி
சகலரும் வசைபேச லாச்சு மங்கை.

விருத்தம்.

அலங்கார வீடுவாச லானதோர் பணதியெல்லாம்
கலங்காத மனத்தோடீந்து கன்னிநானுனை யணைந்தேன்
பெலங்களும்கெட்டுப்பெற்றோர் தேட்டையுமிழந்துயிப்போ
குலத்துளோர் பெண்டு பிள்ளை குலநலமிளந்தேன் நீலி.

வேறு

காலனைப்போலொத்த கள்ளி
என்ன கனக்கப் பேசுறாய் துள்ளி
சாலங்கள் காட்டியே நீயுமெனக்கு முன்
வாஷங்கள் பூசுவா யள்ளி

விருத்தம்.

பாதாள மூலிபோலப் படபடென்றிரையவேண்டாம்
காதல் கொண்டிருக்கு முன்றன் மனைவியு மக்களோடு
ஆதரவாகச்சென் றமகிழ்ந்தவர்களோடு
நாதனுமெனது பிராண நாயகன் வரமுன் போவாய்

வேறு.

ஏதுக்கு நிற்கிறாய் நீயும்
யெட்டி யப்பாலேநீ போவாய்
சூதுக்காரக் கள்ளி யென்று
தூஷிக்க வேண்டாய்நீ போபோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விருத்தம்.

அருமையாய்த் தேடிச் சேர்த்த வரும்பொருளீயும்போது
கருணைசே ரெனது பிராண நாதனார் நீதானென்றாய்
திருவருட் கடுக்குமோநீ செப்பிய வார்த்தையிப்போ
எருமைபோல் கெட்ட வேசி யென்னடி சொன்னாய் தாசி.

### வேறு.

அருமைக் கணவனார் வரமுன்
அகன்றுபோ வென்றுமே சொன்னாய்
பரிகாரி வீட்டுக்குப் போக
பத்து ரூபாத்தாடி சண்டாளி அரு.

### விருத்தம்.

என்னடா மூடா நீதா னின்னேரம்மட்டும் நின்று
முன்னமே தந்தேனென்று முதன்மையும் பேசுகின்றாய்
பன்முறை சொல்லச் சொல்லப் பசப்புறாய் நெடுகநின்று
உன்னை நானிப்போ பொலிஸ்ற்றேசனிலடைப்பிப்பேனே,

### வேறு.

மூடா நீயென்றுமே சொன்னாய்
மூதேவி முண்டைநீ போடி
கூடாத வார்த்தைகள் பேசும்
குடிகேடியே நீகிட்ட வாடி மூடா.

### விருத்தம்.

பொருளெலாங் கவர்ந்துகொண்டுபெண்ணையும் மணமுந்தந்து
பரவணி தன்னைக் காட்டிப் பழிமொழி பகர்ந்தாய் பாவி
கருணை யில்லாத நீலி காசினி பழிக்க வைத்தாய்
அரனுனைக் கேட்பாரென்போ லல்லவது திண்ணந்தானே.

### வசனம்.

ஆகா கணிகையே நீ முன்னமே மிகவும் அன்பு பாராட்டிய செகசால வித்தையிலென் மனமானது மயங்கி யான் மகா கஷ்டமெடுத்து தேடியதும் எமது முதியோர்களால் வரப்பட்ட பழைமையாகிய அரிய சம்பாத்தியங்கள் யாவையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு யான் மன நட்போடிப்ந்ததும் அல்லாமல், நமதரிமை யான நாயகியாருடைய பொருளிலும் அவரது சிந்தையானது வருந்தவும் பிள்ளைகள் வருந்தவும், சுற்றமித்திரர் வருந்தவும் யானவர்களைப் பொருட்படுத்தாது உன்னிடத்தில் வந்து உனது மயக்கமாகியவலையிலுட்சிக்கியானலைந்ததைப்பார்த்தால் வேடனுடைய வலையிற் சிக்குண்ட மான்போலாச்சுது நல்ல திருக்கட்டும், எமது கர்மத்தின் செயலோ விளங்கவில்லை; அடிபாதகி உனது பலநோயும் வந்து எம்மைப் பிடித்ததே யான் என்செய்வேன் இப்போ நடக்கும்போது தேசந்தெரி யாது இருள்போல் வருகின்றதே, எமது மனைவி மக்களுடன் போவோமென்றால் என் கைகால் முதலிய பலவுறுப்புக்களும் சோருகுதே பசிதாகமோ மிகவும் வருத்துகுதே இதற்கென் செய்வேன் ஜெகதீசா.

விருத்தம்.

அரகரா கயிலைவாசா அம்மை யுமையவள் பாகா போற்றி
சரவணபவனை யீன்ற சதாசிவப் பொருளே போற்றி
கருணைசெய் தாள்வாயென்னைக் கங்கைவார்சடையாய்போற்றி
அரவினை யணிந்த நாதா அடியேனை யாள்வாய் போற்றி.

எங்கையான் கண்டு தேடுவேன் எ—மெ.

பல்லவி

என்ன செய்குவேன் சிவமே
நானேது செய்குவேன் சிவமே—நான் என்ன.

அனுபல்லவி

இந்த ஏழைதனை விழித்துன்
கடைக்கண்ணாலே பார்த்தருள்
ஈசா ஜெகதீசா நடராசா-நான் என்ன

சரணங்கள்

கன்னல்மொழி யுமை பாலன்
வடிவேலன் வள்ளிலோலன்
அன்பர்க்கருள் பாலன்
றனையீன்றருள் பரசிவமே - நான் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வினை நீக்கியே யுன்னிரு பாதமென்
சென்னியில் வைத்துமே
சேவடி தாராய்
கருணாகரனேபரிபூரணனேகிர்பாகரனே-நான் என்ன
நரியினைப் பரிபோ
லாக்கிய நாதா
எருமைக் கடாவுடன்
சண்டனை யுதைத்தபொற்பாதாஓம்அரகர அரகர-நான் என்.
வருவா யெனக்கு முன்
தருவாயுன் பதமலர்
கருவில் வாராமலே
காத்துரட்சிப்பாய் ஓம்அரகர அரகர - நான் என்ன

விருத்தம்

கைப்பொருளெல்லாம் வேசிக் கீந்துமே கவலைகொண்டு
ஒப்புடனுபசரிக்கு மென்மனைவியாம் மக்களோடு
செப்பமாய் வீடுசேர்வே மென்றுமே கவலைகொண்டு
தப்பிதஞ் செய்த தாசி கேற்றைவிட்டேகினரே.

விருத்தம்.

ஏகியே மெல்ல மெல்ல நடந்துமே யிருந்தெழுந்து
சாகவோ யெனது காலமிப்படி வந்ததென்று
தேகத்தில் நோய்வருத்த தெருவுளோர்மிக நகைக்க
தாகமும் பசியுமிஞ்சத் தார்குழல் வீடுசேர்ந்தான்.

மனைவிகூறல் விருத்தம்

சென்றுமே யிருந்த நாதன் சீக்கிரம் வந்தானென்று
என்றுமே நினைத்துவந்து எதிரிலே நின்று பார்த்து
நன்றியும் நலமுங் கெட்டு நன்மை தீமையையுணராமல்நீ
குன்றியே போச்சுதுன்றன் னழகுடன் செல்வமெல்லாம்.

விருத்தம்

அரகரா கதிரைவாசா அப்பனே யென்ன செய்வேன்
கருணைசெய்தாளவேணுங் கந்தனே யிந்தவேளை
முருகனே குகனே யெங்கள் முதல்வனே வந்துகார்ப்பாய்
திருவருள் சுரந்து எந்தன்பிராணநாதனார்துயரந்தீர்ப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைசேரெனது பிராண நாதனே நீயுமிப்போ
அருமையு மிழந்து வுன்ற னழகுடன் பொருளிழந்து
வருவது தெரியாவண்ணம் வஞ்சிதன் வலையிற் சிக்கி
பெருமானையும் மறந்து அப்போபெற்ற பிள்ளை தனையுமறந்
தாயப்பா

அயலவர் கூறல் விருத்தம்.

இப்படி யழுது நின்று ஏங்கியே வருந்தும்போது
சப்பிரமஞ்சத் துறங்கி சதிசெய்த வேசி வீட்டால்
எப்பநீ வந்தாய் மூடா யிவர்களேன் வருந்துகின்றார்
தப்பிதஞ் செய்தாயென் றயலவர் கூறிப்போனார்

பிள்ளைகூறல் விருத்தம்

அருமைசேர் பிதாவே நீதா னன்னையோ டெம்மைவிட்டு
கருணைநீ மிகவுங்கொண்டு கணிகைதன் வீட்டுக்கேகி
வருவது தெரியாவண்ணம் வகைதப்பி யலைந்துயிப்போ
பொருளையுமிழந்து பொல்லா நோயுடன் வந்துசேர்ந்தாய்

ஆகா வெங்கள் அருமையான பிதாவே தேவரீர் முன்னமே நீர் ஆகாமியமே குடிகொண்ட கணிகை மாதாகிய அவளிடத்திற் செல்லும்போது நமக்கு இதனாலென்ன துயரம் வந்து நேருமோ வென்று விளங்காமல் வெகு பிரயாசை யெடுத்து முதியோர் தேடிவைத்த பொருளையும் வம்பிலிழந்து எமதருமையான மாதாவையும் எம்மையும் கவனியாமல் கைப்பொருளையிழந்து இப்போ நீர் வந்திருக்கும் வகையைப் பார்த்தால் பெரும் பரிதாபமாக விருக்கின்றது மன்றி உங்கள் நெஞ்சமானது தாமரையிலையில்பட்ட நீர்த்துளிபோலு மிருக்கின்றதே ஆகா பிதாவே நீர் முன்னமே எங்கள் பிதாவாகிய அனாதிபாராபரவஸ்துவாகிய ஜெகதீசனை பக்தியோடு நினைத்து அனுதினமும் வழிபடாத படியால் வந்த துயரத்துக்கு இனி என் செய்யலாம் ஜெகதீசா

சுருதி

இவனுடைய கோல மிதுவென்ன வந்தோ
என்று பலரும் பார்த்துப் பேச
ஏங்கித் தூங்கி வருந்தி மனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்காலஞ் சுறுக்கில்
வந்திட வேணும்
என்றலைவிதி யிப்படியாச்சுதே
என்று வருந்தி அப்போ சிவசிவா
வென்றழுது குளறி
அன்னை தந்தையர்
தேட்ட மடியோடிழந்து
முன்செய்கன்ம வினையோவென்று
தடதடத்தேமிக வயர்ந்து கூவி
தமர்தார மகவு சகலரும் வெறுக்க
இவ்வுலகி லிருப்பது
சரியல்ல வென்று
எண்ணும்போது இயமனும் வந்தால்

(ஆகாநீ) என்னசொல்லுவாய் மனமே என்ற—மெட்டு,

பல்லவி.

என்ன சொல்லுவாய் நெஞ்சமே
ஏமன் வந்தழைத்திடிலேதுசொல்லுவாய் நெஞ்சமே

அனுபல்லவி.

முன்செய் வினையாலிச் செனனமெடுத்தலைந்தும்
மூடத்தனமாய்ப் பவந்தேட நினைக்கின்றாயே என்ன

சரணங்கள்.

பெண்டில் பிள்ளைசத மென்று நினைத்துச்சிவ
தொண்டு செய்யாமல் நிதம் சண்டித்தனங்கள் செய்து
தெண்டித்தே பொருள் தேடியதைப் பெரிய
பெட்டியிலடைத்துவைத்த யட்டியென்றழைத்திடில் என்
தண்டாயுதமுந் திரிசூலபாசமுடன் சண்டன் கடாவில்வந்து
கொண்டுபோக வரும்வேளை அந்தவேளை
கண்டு தடுப்பவரேது இதிலுண்டோ பலனுனக்கேது
பெரும்வாது மிகத்தீது ஆகாநீ என்ன
கிட்ட நெருங்கியுனை யெட்டி யிழுத்துக்கையால்
குட்டிய தட்டி அரை வட்டிக்குப் பணமெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டுப்புரிந்து பொருள் தேடியுலகில் நிதம்
முழுவட்டி வாங்கித்தீய செலவு செய்த கொடும் [என்ன
பாவியென்றே யுன்னைக் கூவியழைத்திடும்வேளை அந்தவேளை

குட்டிப்பிரமனைச் சிறை வைத்த குருபரனை
நித்தம் மனதில் வைத்துப் பத்திபுரியாமலே
கெட்டதோசி வேசியரி லாசை மிகவேகொண்டு
சொந்த மனைவிநிதம் நொந்து புலம்ப வைத்த
துட்டாவென் றடித்திடில் ஆகாநீ என்ன

அண்டர் தொழுந்திருத்தண்டாயுதபாணி என்ற—மெட்டு

பல்லவி.

வன்னமயிலேறும் பன்னிருகையனை
வாழ்த்தி நிதந்தொழு தேத்திதுதி மனமே

அனுபல்லவி.

கன்னல்மொழியுமையாள் திருப்பாலனை
சென்னிமலைவடி வேலனையே நிதம் வன்ன

சரணங்கள்.

கந்தனை யனுதினஞ்
சிந்தனை செய்திடப்
பந்தவினையது பற்றது நீங்கிப்
பரசிவபாலன் பதமலர் பெறலாம்
ஓம்அரகர அரகரவென் றுரை மனமே வன்ன

அன்னை தந்தை தமர்தாரந் துணையென்
றலைந்து திரிந்த நாழ்ப்போதும்
அத்தனை யெங்கள் சித்தனை
முத்திதருஞ் சிவ சுத்தனை
எத்திசையும் புகழ் பித்தனை
பத்திபுரிந்தே யனுதினமும்நீ
ஓம் அரகர அரகர வென்றுரை மனமே வன்ன

மாதர் மயக்கத்தையே யொழித்து
மாதுதெய்வானை மணாளனையே
கதிரைமலை முருகனையே
துதி செய்வாயனுதினமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பொருளாம் பெருமானுர்
பாலகனுர் திருவடியை
விதிப்படியே மறவாதே
விமலனடி தானடைவாய்
ஓம் அரகர அரகர வென்றுரை மனமே — வன்ன

மாயவித்தை செய்கிறன் என்ற—மெட்டு

பல்லவி

சாலவித்தை செய்கிறுனே
சண்முகநாதன் — சாலவித்தை

சரணங்கள்.

கோலமயிலேறு மெங்கள்
குமரகுரு பரமுருகன் — சாலவித்
ஆலமுண்ட கண்டனருள்
அறுமுகவனுடல்தனை
ஆரறிய வல்லவர்கள்
எங்களம்மை சிவகாமிசுதன் — சாலவித்தை
படைத்துக் காத்தழிக்கிறுன்
பாரை யரசாளுகிறுன்
அனைத்துயிர் தன்னையுமே
ஆட்டுகின்ற ஜெகதீசன் — சாலவித்தை
திடமுடன் றிருவடியைச்
சிந்தனை செய்திருப்பதற்குச்
சோதனை செய்தே யுலக
வேதனைக்கு ளாட்டுகிறுன் — சாலவித்தை
காட்டுகிறுன் பசிதாகம்
மூட்டுகிறு னெப்பொழுதும்
மாட்டுகிறுன் தத்துவத்தில்
ஆட்டுகிறு னெங்கள்பிரான் — சாலவித்தை
அருவமுருவமாகி
யனதி சிவமகவாகி
கருணையுட வெவ்வுலகும்
காக்கவந்த வெங்கள் பிரான் — சாலவித்தை
அரியதிருக் கதிரைமலை
அகமகிழ்ந்தே யுறையும்
அரகர முருகனுடை
யாடல்தனை யாரறிவார் — சாலவித்தை

வேலும் மயிலுந் துணை.

---

239.P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org